# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2019 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, தேசிய புத்தாக்க முகவராண்மைச் சட்டம்*

---

*(2019 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 15 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2019, நவெம்பர் மாதம் 15 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 24.00** **தபாற் செலவு : ரூபா 30.00**

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**2019 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, தேசிய புத்தாக்க முகவராண்மைச் சட்டம்**

[*2019 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 15 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.*]

*ச.வ. - ஓ. 33/2019*

**தேசிய புத்தாக்க முகவராண்மையை தாபிப்பதற்கும் மற்றும் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளை வான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-*

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.*

***1.*** *இச்சட்டம், 2019 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, தேசிய புத்தாக்க முகவராண்மைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம் சனாதிபதி நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும். (இதனகத்துப்பின்னர் "நியமிக்கப்பட்ட தேதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்)*

## *பாகம்* I

### தேசிய புத்தாக்க முகவராண்மை

*தேசிய முகவராண்மையைத் தாபித்தல்.*

***2.*** *(1) (இதனகத்துப்பின்னர் "முகவராண்மை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) தேசிய புத்தாக்க முகவராண்மை என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான முகவராண்மை ஒன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.*

*(2) முகவராண்மையானது (1) ஆம் உட்பிரிவினால் அதற்கு குறித்தளிக்கப்பட்ட பெயரைக்கொண்டு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும் என்பதுடன் இடையறாவழியுரிமையையும் பொது இலச்சினையையும் கொண்டிருத்தலும் வேண்டும் அத்துடன் அது அப்பெயர்கொண்டு வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன் வழக்குத் தொடரவும்படலாம்.*

*முகவராண்மையின் குறிக்கோள்கள்.*

***3.*** *முகவராண்மையின் குறிக்கோள்கள் -*

*(அ) சமூகப் புத்தாக்கம், அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் புத்தாக்கம், பாதுகாப்புப் புத்தாக்கம், சூழல் புத்தாக்கம் மற்றும் சேவைப் புத்தாக்கம் அத்துடன் பொருளாதாரத்தின் மீது அவற்றின் தாக்கம் என்பவற்றின் மீதான சிறந்த புரிந்துணர்வை மேம்படுத்துவதாகவும்;*

(ஆ) புத்தாக்கம் தொடர்பில் தேசிய கொள்கைகளை வகுத்தமைத்தலுக்காக அரசாங்கத்திற்கு விதப்புரைகளைச் செய்வதற்காகவும்;

(இ) தேசிய ஆராய்ச்சியானது பொருளாதார மற்றும் தேசிய பொருளாதார குறிக்கோள்களுடன் சீரமைக்கப்படுகின்றது என்பதுடன் அவற்றிற்கு பங்களிப்பும் செய்கின்றது என்பதை உறுதிப்படுத்துவதற்காகவும்;

(ஈ) புத்தாக்கவியலாளரை ஒருங்கிணைப்பதற்காகவும் தாக்கத்தை வளர்ப்பதற்கான முயற்சிகளுக்காகவும்;

(உ) புத்தாக்கத்திற்கு இடையூறான பகிரங்க மற்றும் தனியார் துறையில் எவையேனும் தடைகளை இனங்காண்பதற்காகவும்;

(ஊ) துடிப்பான தேசிய புத்தாக்க சூழல் முறைமை ஒன்றை தாபிப்பதற்கு தனியார் துறையில் புத்தாக்கத்திற்கு ஆதாரவளிப்பதற்கான வசதியளிப்பதற்காகவும்;

இருத்தல் வேண்டும்.

முகவராண்மையின் தத்துவங்களும் பணிகளும் கடமைகளும்.

**4**. முகவராண்மையின் தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகள் என்பன பின்வருவனவாக இருத்தல் வேண்டும்.

(அ) முகவராண்மையின் குறிக்கோள்களின் முக்கியமான அம்சங்களிற்கு இயைபான பகிரங்க மற்றும் தனியார் துறைகளுடன் ஒருங்கிணைந்து வேலை செய்தல்.

(ஆ) படைப்பு பொருளாதாரம் ஒன்றிற்கு ஆதரவளிப்பதற்காக தேசிய புத்தாக்க நிகழ்ச்சித்திட்டத்தை ஆரம்பிப்பதற்கும் அதற்கு நிதியீட்டுவதற்கும் அரசாங்கத்திற்கு விதப்புரைகளைச் செய்தல்;

(இ) அமைச்சரவையினால் அங்கீகரிக்கக்கூடியவாறான இலங்கை புத்தாக்கம் மற்றும் தொழில்முயற்சியாண்மை தந்திரோபாயத்தை கொண்டுள்ள தேசிய புத்தாக்க சூழல் முறைமை ஒன்றை விருத்தி செய்தலும் நிலைத்திருக்கச் செய்தலும்;

(ஈ) ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்பவியல் மாற்றத்திலிருந்து உருவாகின்ற உயர் தொழில்நுட்ப தொழில்முயற்சிகளின் வசதியளிப்பின் ஊடாக தேசிய புத்தாக்கம் மற்றும் தொழில்முயற்சியாண்மை தந்திரோபாயத்திற்கு ஆதரவளித்தல்;

(உ) புத்தாக்கம் மற்றும் தொழில் முயற்சியாண்மை பற்றிய முதலீடுகள், கொள்கைகள் மற்றும் தந்திரோபாயங்களின் பயனுறுதித் தன்மையை கண்காணித்தலும் மதிப்பீடு செய்தலும்;

(ஊ) புத்தாக்க செயற்பாடுகளின் வெளியீடுகளின் வர்த்தகமயப்படுத்தலை ஊக்குவிப்பதற்கு இலங்கையில் இயைபான அமைச்சுக்களுடன், திணைக்களங்களுடன் மற்றும் வேறு புத்தாக்க நிறுவனங்களுடன் அத்துடன் சர்வதேச நிறுவனங்களுடன் புத்தாக்கத்தில் சர்வதேச செயற்பாடுகளை ஒருங்கிணைத்தலும் ஒத்திசையச் செய்தலும்;

(எ) அமைச்சரவையால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறான இலங்கைப் புத்தாக்க தொழில் முயற்சியாண்மைத் தந்திரோபாயத்துக்கு அமைய நெகிழ்வான பொருளாதார நிலையை உறுதிப்படுத்துவதற்கு உலகளாவியரீதியிலான புத்தாக்க குறியீடுகளை வரிசைப்படுத்துவதன் மூலம் இலங்கையின் முன்னேற்றத்தை மேல்நோக்கி இயக்கவும்;

(ஏ) சர்வதேச இணைப்பு மற்றும் இருப்பை கவனத்திற்கொண்டு சூழல் முறைமையினை மேவுகின்ற இலங்கை வருடாந்த புத்தாக்க மற்றும் தொழில் முயற்சியாண்மை அறிக்கைகளைப் பெறுதலும் இணைத்தலும், மதிப்பீடு செய்தலும் மற்றும் வெளியிடுதலும்;

(ஐ) முகவராண்மை தேவைப்படுத்தக்கூடியதான ஏதேனும் அசையும் அல்லது அசையாத ஆதனத்தைக் கொள்வனவு செய்தலும், முகவராண்மையின் குறிக்கோள்களை மேம்படுத்தும் நோக்குடன் உசிதமானதெனக் கருதக்கூடியவாறான முகவராண்மைக்கு சொந்தமான ஏதேனும் அசையும் அல்லது அசையாத ஆதனத்தை வைத்திருத்தலும், குத்தகைக்கு அல்லது வாடகைக்கு எடுத்தலும், கொடுத்தலும், ஈடுவைத்தலும், அடைமானம் வைத்தலும் அல்லது விற்பனை செய்தலும் அல்லது வேறுவகையாக கையுதிர்த்தலும்;

(ஒ) ஏதேனும் ஏற்புடையற்பாலதான எழுத்திலான சட்டத்திற்கமைய ஏதேனும் அரச வங்கியில் அல்லது எவையேனும் வங்கிகளில் நடைமுறை, சேமிப்பு அல்லது வேறு வைப்புக் கணக்குகளைத் திறத்தலும், பேணுதலும் அல்லது அத்தகைய கணக்குகளை மூடுதலும்;

(ஓ) ஏதேனும் ஏற்புடையற்பாலதான எழுத்திலான சட்டத்திற்கமைய முகவராண்மையின் பயன்பாட்டிற்காக இலங்கையிலுள்ள அல்லது இலங்கைக்கு வெளியிலுள்ள வளங்களில் இருந்து கொடைகள், மானியக்கொடை அல்லது கடன்கள், நன்கொடைகள் மற்றும் அசையும் மற்றும் அசையாத ஆகிய இரண்டிலுமான மரணசாசனக் கொடை:

ஆயினும் முகவராண்மை அதற்குச் செய்யப்பட்ட அனைத்து வெளிநாட்டு மானியங்கள், கொடைகள் அல்லது மரணசாசனக்கொடை தொடர்பில் நிதி அமைச்சின் எழுத்திலான முன்னங்கீகாரம் பெறுதல் வேண்டும்.

(ஔ) முகவராண்மையின் ஏதேனும் வங்கிக் கணக்கில் அல்லது எவையேனும் வங்கிகளின் கணக்குகளிலுள்ள வைப்பு, முகவராண்மையின் நோக்கங்களுக்காக உடனடியாகத் தேவைப்படாதிருக்கின்றதான முகவராண்மையின் நிதிகள்;

(க) முகவராண்மையின் அலுவல்களை நிருவகிப்பது தொடர்பான கருமங்கள் தொடர்பிலான விதிகளை ஆக்குதல்;

(ங) இயைபான நிதி ஒழுங்குவிதிகளுக்கு இணங்கியொழுகு வதிலான தோதான கொடுப்பனவுகளுக்கான வெளிமூலங்கள், முகவராண்மையின் கடமைகள் மற்றும் பணிகளை சுமுகமாகவும் வினைத்திறனுடனும் நிறைவேற்றுவதற்கு அவசியமான ஆராய்ச்சி, தரவுகளை இணைத்தல் அல்லது வேறு ஏதேனும் செயற்பாடுகள் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக எவரேனும் ஆளினால் எல்லா ஆராய்ச்சியினதும், அவரினால் சேகரிக்கப்பட்ட ஏதேனும் மூலப் பொருளினதும் தரவினதும் சொத்தாண்மையைக் கொண்டிருத்தல் வேண்டும்;

(ச) முகவராண்மையின் நோக்கங்கள் தொடர்பில் எவரேனும் உள்நாட்டு அல்லது வெளிநாட்டு ஆட்களுடன் அல்லது நிறுவனங்களுடன் அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் உடன்படிக்கைகளைச் செய்துகொள்ளல்;

(ஞ) முகவராண்மையின் குறிக்கோள்களை எய்துவதன் பொருட்டு அமைச்சரின் அங்கீகாரத்துடன் தனியார் துறையுடனான கூட்டுமுயற்சிகளை ஒழுங்கிணைத்தலும் மற்றும் வசதியளித்தலும்;

(ட) பொதுவாக முகவராண்மையின் குறிக்கோள்களை எய்துவதற்காக அத்தகைய செயல்களையும் கருமங்களையும் செய்தல்.

## பாகம் II

### முகவராண்மையின் நிருவாகமும் முகாமையும்

**5.** (1) முகவராண்மை பற்றிய அலுவல்களின் நிருவாகமும் முகாமையும் (இதனகத்துப்பின்னர் "பேரவை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நெறிப்படுத்தல் பேரவை ஒன்றிற்கு உரித்தாக்கப்படல் வேண்டும். முகவராண்மையின் நிருவாகம்.

(2) பேரவையானது முகவராண்மையின் அலுவல்களை நிருவகிக்கும் நோக்கத்திற்காக இச்சட்டத்தினால் முகவராண்மை மீது அளிக்கப்பட்ட, அதற்கு குறித்தளிக்கப்பட்ட அல்லது அதன் விதிக்கப்பட்ட தத்துவங்களை, பணிகளை மற்றும் கடமைகளை பிரயோகித்தலும், நிறைவேற்றுதலும் மற்றும் புரிதலும் வேண்டும்.

பேரவையின் அமைப்பு.

***6.*** *(1)* பேரவையானது பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

*(அ)* பின்வரும் பதவிவழி உறுப்பினர்கள் அதாவது —

(i) பேரவையின் தவிசாளராக இருக்க வேண்டியவரான சனாதிபதியின் செயலாளர்;

(ii) அவ்வமைச்சரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட மேலதிகச் செயலாளரின் பதவிவரிசைக்கு குறையாத அபிவிருத்தி மூலோபாயம் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சு அலுவலர்;

(iii) அவ்வமைச்சரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட மேலதிகச் செயலாளரின் பதவிவரிசைக்கு குறையாத நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சு அலுவலர்;

(iv) தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது பணிப்பாளரின் பதவிவரிசைக்கு குறையாத அவரது அலுவலர்;

(v) *2003* ஆம் ஆண்டின் *32* ஆம் இலக்க, புலமைச்சொத்து சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட இலங்கை தேசிய புலமைச்சொத்து அலுவலகத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி;

(vi) அவ்வமைச்சினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட மேலதிகச் செயலாளரின் பதவிவரிசைக்கு குறையாத அறிவியல் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரினது அமைச்சு அலுவலர்;

(vii) அவ்வமைச்சினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட மேலதிகச் செயலாளரின் பதவிவரிசைக்கு குறையாத தொழில்நுட்பவியல் மற்றும் ஆராய்ச்சி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரினது அமைச்சு அலுவலர்;

(viii) அவ்வமைச்சினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட மேலதிகச் செயலாளர் பதவிவரிசைக்கு குறையாத சர்வதேச வியாபாரம் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரினது அமைச்சு அலுவலர்;

(ix) அவ்வமைச்சினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட மேலதிகச் செயலாளர் ஒருவரின் பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையில் உள்ள கல்வி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சு அலுவலர்;

(x) அவ்வமைச்சினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட மேலதிகச் செயலாளர் ஒருவரின் பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையில் உள்ள உயர்கல்வி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர்;

(xi) வர்த்தகத் திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அத்திணைக்களத்தின் பணிப்பாளர் ஒருவரின் பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையில் உள்ள அலுவலர் ஒருவர்;

(xii) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின் 53 ஆம் இலக்க, இலங்கை புத்தாக்குநருக்கான ஊக்குவிப்புக்கள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை புத்தாக்குநர் ஆணைக்குழுவின் ஆணையாளர் அல்லது இலங்கை புத்தாக்குநர் ஆணைக்குழுவினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட அவ்வாணைக் குழுவின் எவரேனும் உதவி ஆணையாளர்; அத்துடன்

(xiii) இலங்கை நனோ தொழில்நுட்பவியல் நிறுவகத்தின் தவிசாளர் அல்லது அவரது நியமத்தர்; அத்துடன்

(ஆ) (i) அமைச்சரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அத்துடன் சனாதிபதியினால் நியமிக்கப்பட்ட புத்தாக்கம், தொழில்முயற்சியாண்மை, சமூகப்புத்தாக்கம், தொழில், முயற்சி, மூலதனம், கல்வி அல்லது நிதி தொடர்பான திறமை எய்தியுள்ள ஆளொருவர்; அத்துடன்

(ii) பகிரங்க மற்றும் தனியார்துறை ஆகிய இரண்டிலுமிருந்து சனாதிபதியினால் நியமிக்கப்பட்ட புத்தாக்கம், தொழில் முயற்சியாண்மை, சமூகப்புத்தாக்கம், தொழில் முயற்சி, மூலதனம், சட்டம், கல்வி அல்லது நிதி தொடர்பான திறமை எய்தியுள்ள ஆறு ஆட்களுக்கு மேற்படாதோர்;

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட விடயங்கள் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட அமைச்சுகளினுள் அடங்கியுள்ள பட்சத்தில், பின்னர் அமைச்சரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட மேலதிகச் செயலாளரின் பதவிவரிசைக்கு குறையாத அத்தகைய ஒவ்வொரு அமைச்சின் அலுவலர் பேரவையின் உறுப்பினர் ஒருவராதல் வேண்டும்.

பேரவையின் உறுப்பினர் ஒருவராக இருப்பதற்கான தகைமையீனம்.

**7**. எவரேனும் ஆள் -

(அ) அத்தகைய ஆள் இலங்கைப் பிரசையொருவராக இல்லாதிருந்தால் அல்லது இல்லாதொழிந்தால்;

(ஆ) அத்தகைய ஆள் பாராளுமன்றத்தின், மாகாணசபை ஒன்றின் அல்லது ஏதேனும் உள்ளூர் அதிகாரசபையின் உறுப்பினர் ஒருவராக இருப்பின் அல்லது உறுப்பினர் ஒருவராகவரின்;

(இ) அத்தகைய ஆள் பேரவையின் உறுப்பினர் என்ற முறையில் அவரின் பணிகள் அவரால் நிறைவேற்றப்படுவதை பாதிக்கக்கூடிய சாத்தியமுள்ள வகையில் ஏதேனும் நிதிசார் அல்லது வேறு அக்கறையை கொண்டிருத்தல்;

(ஈ) அத்தகைய ஆள் இலங்கையில் அல்லது வேறு ஏதேனும் நாட்டில் உள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் சித்தசுவாதீன மற்றவராக கண்டுபிடித்தால் அல்லது வெளிப்படுத்தினால்;

(உ) அத்தகைய ஆள் கடனிறுக்க வகையற்றவராக இருந்தால்; அல்லது

(ஊ) அத்தகைய ஆள் இலங்கையிலுள்ள அல்லது வேறு ஏதேனும் நாட்டிலுள்ள ஏதேனும் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட மறியற்றண்டனை ஒன்றை அனுபவித்துக் கொண்டிருந்தால் அல்லது அனுபவித்திருந்தால்.

அத்தகைய ஆள் பேரவையின் உறுப்பினர் ஒருவராக நியமிக்கப்படுவதிலிருந்து அல்லது தொடர்ந்திருப்பதிலிருந்து தகைமையற்றவராதல் வேண்டும்.

நியமிக்கப்பட்ட உறுப்பினர்களின் பதவிக்காலம்.

**8**. பேரவையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒவ்வொருவரும் இறப்பின் மூலம், பதவிவிலகல் மூலம் அல்லது பதவி அகற்றல் மூலம் முன்னதாகவே பதவியை வறிதாக்கியிருந்தாலொழிய, மூன்று வருட காலப்பகுதி ஒன்றிற்கு பதவிவகித்தல் வேண்டும் என்பதுடன் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய தொடர்ச்சியாகவேனும் சரி அல்லது வேறுவகையாகவேனும்சரி மேலும் ஒன்றுக்கு மேற்படாத காலப்பகுதி ஒன்றிற்கு மீள்நியமனம் செய்வதற்கு தகுதியுடையவராதல் வேண்டும்.

நியமிக்கப்பட்ட உறுப்பினர்களின் பதவி அகற்றல் பதவி விலகல் முதலியன.

**9**. (1) பேரவையின் எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஏதேனும் காலத்தில் சனாதிபதிக்கு முகவரியிட்டு அனுப்பப்பட்ட கடிதத்தின் மூலம் அவருடைய பதவியிலிருந்து விலகலாம் என்பதுடன் அத்தகைய பதவி விலகலானது எந்தத் தேதியன்று பதவிவிலகல் சனாதிபதியினால் எழுத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டதோ அந்தத்தேதியிலிருந்து பயன் கொடுத்தலும் வேண்டும்.

(2) சனாதிபதி குறித்தளிக்கப்பட்ட காரணங்களுக்காக எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினரை பதவியிலிருந்து அகற்றலாம். பதவியிலிருந்து அகற்றப்பட்டுள்ள நியமிக்கப்பட்ட உறுப்பினர் பேரவையின் உறுப்பினர் ஒருவராக மீளநியமனம் செய்வதற்கு அல்லது வேறு ஏதேனும் தன்மையில் பேரவையில் சேவையாற்றுவதற்கு தகுதியுடையவராகவிருத்தல் ஆகாது.

(3) எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினரின் இறப்பினால், பதவிவிலகலினால் அல்லது பதவி அகற்றலினால் பதவி வறிதாகும் பட்சத்தில், சனாதிபதி 6 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்திக்கு அமைய அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு வேறொரு ஆளை நியமித்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய ஆள் எவ் உறுப்பினரை அவர் அடுத்துறுகின்றாரோ அவ்வுறுப்பினரின் பதவிக் காலத்தின் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதியொன்றிற்கு பதவிவகித்தல் வேண்டும்.

(4) பேரவையின் எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினர் சுகவீனம் காரணமாக அல்லது வேறு ஏதேனும் காரணமாக அவருடைய பதவியில் கடமைகளை நிறைவேற்றுவதற்கு தற்காலிகமாக இயலாதவராக இருக்குமிடத்து அல்லது மூன்று மாதங்களுக்கு குறைவானது அல்லாத காலப்பகுதி ஒன்றிற்கு இலங்கையில் இல்லாதிருப்பின், சனாதிபதி (6) ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளை கவனத்திற்கொண்டு அவருடைய இல்லாமையின்போது அத்தகைய உறுப்பினரின் இடத்தில் செயலாற்றுவதற்கான வேறு எவரேனும் ஆளை நியமித்தல் வேண்டும்.

(5) பேரவையின் எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினர் தவிசாளரிடமிருந்து இல்லாமைக்கான முன் அனுமதி பெறப்படாமல் பேரவையின் மூன்று தொடர்ச்சியான கூட்டங்களிற்கு சமுகமளிப்பதற்கு தவறுகின்றவிடத்து, அத்தகைய உறுப்பினர் மூன்றாவது கூட்ட முடிவில் அவரது பதவி வறிதாக்கப்பட்டிருப்பதாக கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் சனாதிபதி அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு (3) ஆம் உட்பிரிவில் ஏற்பாடுசெய்யப்பட்ட முறையில் வேறொரு ஆளை நியமித்தல் வேண்டும்.

**10.** (1) பதினான்காம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட முகவராண்மையின் பிரதான புத்தாக்க அலுவலர் பேரவையின் எல்லாக் கூட்டங்களிற்கும் அழைப்பு விடுத்தல் வேண்டும். பேரவையின் கூட்டங்கள்.

(2) பேரவையின் உறுப்பினர்கள் நேரடியாக அல்லது இலத்திரனியல் வழிவகைமூலம் பேரவையின் கூட்டங்களிற்கு சமூகமளிக்கலாம்.

இவ்வுட்பிரிவின் நோக்கங்களுக்காக "இலத்திரனியல் வழிவகைகள்" என்பது, ஒளித்தோற்ற மாநாடு மற்றும் இணையமாநாடு.

(3) பேரவையின் செயல் அல்லது நடவடிக்கைமுறை எதுவும் பேரவையில் ஏதேனும் வெற்றிடம் ஒன்று இருப்பதன் காரணமாக மட்டும் அல்லது பேரவையின் உறுப்பினர் ஒருவரின் நியமனத்தில் ஏதேனும் பாதிப்பு இருப்பதன் காரணமாக மட்டும் செல்லுபடியற்றதாதல் ஆகாது.

(4) தவிசாளர் சமுகமாக இல்லாதபோது சமுகமாயிருந்த உறுப்பினர்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர் பேரவையின் அத்தகைய கூட்டத்திற்கு தலைமைதாங்குதல் வேண்டும்.

(5) பேரவையின் ஏதேனும் கூட்டத்திற்கான கூட்ட நடப்பெண் ஐந்து உறுப்பினர்களாதல் வேண்டும். சமமான வாக்குகள் இருக்குமிடத்து, பேரவையின் தவிசாளர், அவருடைய வாக்கிற்கு மேலதிகமாக அறுதி யிடும் வாக்கொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**11.** (1) பேரவையின் பணிகளை பயனுறுதியுடன் நிறைவேற்று வதற்காக அத்தகைய விடயப்பொருள் மீது அவர்களது கருத்துக்களை பெற்றுக்கொள்ளும் நோக்கத்திற்காக அத்தகைய கூட்டத்தில் பேரவையினால் கையாளப்படும் ஏதேனும் விடயத்தின் மீது நிபுணத்துவத்தைக் கொண்டுள்ள பேரவையில் ஏதேனும் கூட்டத்திற்கு பேரவையானது அவசியமெனக் கருதுகின்ற பேரவையானது கூட்டங்களிற்கு நிபுணர்களை அழைத்தல்.

போதெல்லாம் நிபுணர்களை அழைக்கலாம். ஆகவே எவ்வாறாயினும் பேரவையானது நிபுணர்களின் கருத்துக்களை ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது பற்றிய முழுமையான விருப்பத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) நிபுணர்களுக்கு பேரவையினால் தீர்மானிக்கப்படக்கூடிய வாறான அத்தகைய ஊதியம் செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன் வாக்களிக்கும் உரிமையை கொண்டிருத்தலாகாது.

*பேரவையின் கூட்டங்களிற்கு சமுகமளிப் பதற்கான ஊதியம்.*

**12.** பேரவையின் உறுப்பினர்கள், நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் கலந்தாலோசனையுடன் சனாதிபதியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஊதியம் செலுத்தப்படலாம்.

*முகவராண் மையின் இலச்சினை.*

**13.** (1) முகவராண்மையின் இலச்சினையானது —

(அ) பேரவையினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் பேரவையினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம்.

(ஆ) பேரவையானது காலத்திற்குக்காலம் தீர்மானிக்கக் கூடியவாறான அத்தகைய ஆளின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும்.

(இ) பேரவையின் அனுமதியின்றி பேரவையின் இரண்டு உறுப்பினர்கள் முன்னிலையிலன்றியும் ஏதேனும் சாசனத்தில் அல்லது ஆவணத்தில் பொறிக்கப் படலாகாது என்பதுடன் அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக அச்சாசனத்தில் அல்லது ஆவணத்தில் கையொப்பமிடுதலும் வேண்டும்.

(2) பேரவையானது எந்த சாசனங்கள் மற்றும் ஆவணங்களிற்கு முகவராண்மையின் இலச்சினை பொறிக்கப்பட்டதோ அந்த சாசனங்கள் மற்றும் ஆவணங்கள் தொடர்பில் பதிவேடு ஒன்றைப் பேணுதல் வேண்டும்.

## பாகம் III

### முகவராண்மையின் பிரதான புத்தாக்க அலுவலர்

**14.** (1) முகவராண்மையின் பிரதான புத்தாக்க அலுவலராக இருப்பதற்கான எண்பிக்கப்பட்ட முகாமைத்துவ அனுபவத்துடன் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து புத்தாக்கம் ஒரு பாடமாக அறிவியல், தொழில்நுட்பவியல் அல்லது தொழில் முகாமைத்துவத்தில் பட்டப்பின் படிப்பு பட்டம் ஒன்றைக் கொண்டுள்ள ஆளொருவர் பேரவையினால் தீர்மானிக்கப்பட்ட அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கமைய பேரவையுடனான கலந்தாலோசனையுடன் சனாதிபதியினால் நியமிக்கப்படுதல் வேண்டும். அவர் பேரவையின் ஏதேனும் கூட்டத்திற்கு சமுகமளிக்கலாம் ஆனால் அத்தகைய ஏதேனும் கூட்டத்தில் வாக்களிப்பதற்கு உரித்துடையவராதல் ஆகாது.

*முகவராண்மையின் பிரதான புத்தாக்க அலுவலர்.*

(2) பிரதான புத்தாக்க அலுவலர், பேரவையின் பொதுவான பணிப்புக்கு அமைய முகவராண்மையின் நிருவாகத்திற்கு பொறுப்புடையவராதல் வேண்டும்.

(3) பிரதான புத்தாக்க அலுவலர் நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் ஒருப்பாட்டுடன் சனாதிபதியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஊதியம் செலுத்தப்படுதல் வேண்டும்.

(4) சனாதிபதி பேரவையின் விதப்புரையின்மீது குறித்தளிக்கப்பட்ட காரணங்களுக்காக இப்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட பிரதான புத்தாக்க அலுவலரை பதவியிலிருந்து அகற்றலாம்.

**15.** (1) முகவராண்மையானது அதனது பணிகளை வினைத்திறனுடன் நிறைவேற்றுவதற்கு அவசியமானதெனக் கருதக்கூடியவாறு அலுவலர்கள் மற்றும் ஊழியர்களின் அத்தகைய எண்ணிக்கையை நியமிக்கலாம்.

*முகவராண்மையின் பணியாட் டொகுதியின் நியமனம்.*

(2) முகவராண்மையானது (2) ஆம் உட்பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் தொடர்பில் –

(அ) அத்தகைய ஊழியர்கள் மற்றும் ஊழியர்கள் மீது ஒழுக்கக்கட்டுப்பாட்டை பிரயோகிக்கலாம் அல்லது அவர்களைப் பதவியிலிருந்து நீக்கலாம்.

(ஆ) அத்தகைய அலுவலர்கள் மற்றும் ஊழியர்களின் தொழில் பற்றிய நியதிகள் மற்றும் நிபந்தனைகளைத் தீர்மானிக்கலாம்;

(இ) எவ்வமைச்சருக்கு நிதி என்னும் விடயம் குறித்துரைக்கப்பட்டதோ அவ்வமைச்சரின் கலந்தாலோசனையுடன் பேரவையினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான, எவ்வீதங்களில் அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் ஊதியமளிக்கப்படவேண்டுமோ அவ் வீதங்களை நிறுவலாம்.

(ஈ) அத்தகைய அலுவலர்கள் மற்றும் ஊழியர்களின் நன்மைக்காக பணியாட்டொகுதி நலன்புரிசேவை மற்றும் சமூகபாதுகாப்புத் திட்டத்தை தாபித்தலும் அத்தகைய ஏதேனும் திட்டத்திற்கு பங்களிப்புச் செய்தலும்.

*முகவராண்மையின் பணியாட்டொகுதிக்கு பகிரங்க அலுவலர்களின் நியமனம்.*

**16.** (1) பேரவையின் வேண்டுகோளின் பேரில் பகிரங்க சேவையிலுள்ள அலுவலர் எவரும் அவ்வலுவலரினதும் பகிரங்க சேவை ஆணைக்குழுவினதும் சம்மதத்துடன் முகவராண்மையின் பணியாட்டொகுதிக்கு பேரவையினால் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதேபோன்ற சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் முகவராண்மையின் பணியாட்டொகுதிக்கு தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச்சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அத்தகைய அலுவலருக்கு அத்துடன் அவர் தொடர்பில் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையதாதல் வேண்டும்.

(3) பகிரங்க சேவையிலுள்ள அலுவலர் எவரும் முகவராண்மையின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுமிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச்சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அத்தகைய அலுவலருக்கு அத்துடன் அவர் தொடர்பில் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையதாதல் வேண்டும்.

**17.** (1) பேரவையின் வேண்டுகோளின் பேரில், 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஏதேனும் உயர்கல்வி நிறுவனத்தின் எவரேனும் அலுவலர் அல்லது ஊழியர் அவ்வலுவலரின் அல்லது ஊழியரின் சம்மதத்துடன் அத்துடன் அவ்ஊழியர் நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அலுவலரின் சம்மதத்துடன் முகவராண்மையின் பணியாட்டொகுதிக்கு தற்காலிகமாக நியமிக்கப்படலாம். அத்தகைய நியமனம் பேரவையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான காலப்பகுதி ஒன்றுக்காகவாதல் வேண்டும். அவர் அதேபோன்ற சம்மதத்துடன் பேரவையினால் இருந்து அத்தகைய பிரதான நிறைவேற்று அலுவலரினால் இணங்கிக்கொள்ளப்படக் கூடியவாறான ஓய்வூதியத்திற்கு அல்லது சகாய நிதியத்திற்கான உரிமைகள் தொடர்பானவை உட்பட அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகள் மீது அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுதல் வேண்டும். உயர்கல்வி நிறுவனங்களில் இருந்து முகவராண்மையின் பணியாட்டொகுதிக்கு அலுவலர்களின் நியமனம்.

(2) எவரேனும் ஆள் (1) ஆம் உட்பிரிவின்கீழ் முகவராண்மையின் பணியாட்டொகுதிக்கு தற்காலிகமாக நியமிக்கப்படுகின்றவிடத்து, அத்தகைய ஆள் முகவராண்மையின் வேறு எவரேனும் உறுப்பினர் என்ற வகையில் அதே ஒழுக்கக்கட்டுப்பாட்டிற்கு அமைந்தவராதல் வேண்டும்.

## பாகம் IV

### *நிதி*

**18.** (1) முகவராண்மையானது அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். முகவராண்மையின் நிதியம்.

(2) பின்வருவன நிதியத்திற்கு வரவுவைக்கப்படல் வேண்டும்:-

(அ) முகவராண்மையின் பயன்பாட்டிற்காக காலத்திற்குக் காலம் பாராளுமன்றத்தினால் வாக்களிக்கப்படக் கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத் தொகைகளும்;

(ஆ) அதனது தத்துவங்களை, கடமைகளை மற்றும் பணிகளை பிரயோகிப்பதற்காக, புரிவதற்காக மற்றும் நிறைவேற்றுவதற்காகவும், முகவராண்மையின் குறிக்கோள்களை மேம்படுத்துவதற்காகவும், 4ஓ எனும் பிரிவிற்கான காப்புவாசகத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே ஏதேனும் மூலத்திலிருந்து கொடையாக, மானியக்கொடையாக, கடனாக, நன்கொடையாக மற்றும் மரணசாசனக்கொடையாக முகவராண்மையினால் பெறப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்;

(இ) இச்சட்டத்தின் கீழ் கட்டணம், இறைகள் அல்லது விதிப்பனவுகள் என்ற வகையாக முகவராண்மை யினால் பெறப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்

(3) இச்சட்டத்தின் கீழ் முகவராண்மையின் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதிலும், புரிவதிலும் நிறைவேற்றுவதிலும் அதனால் உறப்பட்ட செலவினத்தை கொடுத்துத் தீர்ப்பதற்கு தேவைப்படுத்துகின்றவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

*முகவராண் மையின் நிதியாண்டும் கணக்குகளின் கணக்காய்வும்.*

**19.** (1) முகவராண்மையின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) முகவராண்மை, அதன் வருமானமும் செலவினமும் சொத்துக்களும் பொறுப்புக்களும் மற்றும் முகவராண்மையின் வேறு எல்லா நிதிசார் கொடுக்கல்வாங்கல்களும் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(3) பகிரங்க கூட்டுத்தாபனத்தின் கணக்காய்வு செய்வது தொடர்பான அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் முகவராண்மையின் கணக்குகளை கணக்காய்வு செய்வதற்கு ஏற்புடையதாதல் வேண்டும்.

## பாகம் V

### பொது

வருடாந்த அறிக்கைகள்.

**20.** (1) முகவராண்மை நிதி ஆண்டின் முடிவில் ஆறு மாதங்களினுள் முகவராண்மையினை நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள்மீது வருடாந்த அறிக்கை ஒன்று சனாதிபதிக்கு சமர்ப்பித்தல் வேண்டும். பின்வரும் ஆவணங்கள் அத்தகைய அறிக்கையுடன் இணைக்கப்பட்டிருத்தலும் வேண்டும்:–

(அ) கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கையும் சேர்த்து ஆண்டுக்கான முகவராண்மையின் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள்;

(ஆ) எந்த பின்வரும் ஆண்டிற்கு அத்தகைய அறிக்கை மற்றும் கணக்குகள் தொடர்புபடுகின்றதோ அந்த உடனடியான ஆண்டிற்காக முன்மொழியப்பட்ட செயற்பாடுகளின் அறிக்கை ஒன்று

(இ) புத்தாக்கம் மற்றும் தொழில் முயற்சியாண்மை மீதான முதலீடு, கொள்கை மற்றும் மூலோபாயம் பற்றிய பயனுறுதன்மை பற்றிய அறிக்கை ஒன்று

(2) சனாதிபதி வருடாந்த அறிக்கையைப் பெற்றுக்கொண்ட தேதியிலிருந்து மூன்று மாதங்களினுள் (1) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஆவணங்களுடன் சேர்த்து அத்தகைய அறிக்கையை கவனத்திற்கொண்டு பாராளுமன்றத்தில் இருத்தல் வேண்டும்.

இரகசியத்தைப் பேணுவதற்கான வெளிப் படுத்துகை.

**21.** பின்வருவன தவிர பேரவையின் உறுப்பினர்கள் மற்றும் முகவராண்மையின் அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் அவர்களது கடமைகளை ஏற்கும் முன்னர் முகவராண்மையுடன் தொடர்புபட்ட எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் கண்டிப்பான இரகசியத் தன்மை அவதானிப்பதற்கு வாக்குறுதியளித்து வெளிப்படுத்துகை ஒன்றில் கையொப்பமிடுதலும் வேண்டும் என்பதுடன் அத்தகைய வெளிப்படுத்துகை மூலம் பின்வருவனதவிர அவரது பணிகளை நிறைவேற்றுவதில் அவரது அறிவிற்கு எட்டியவரையான ஏதேனும் மர்மத்தை வெளிப்படுத்தாது வாக்குறுதியளித்தல் வேண்டும்:–

(அ) சட்ட நீதிமன்றமொன்றினால் அவ்வாறு செய்வதற்கு தேவைப்படுத்தும்போது; அல்லது

(ஆ) இச்சட்டத்தின் ஏற்பாடுகள் எவற்றுடனும் இணங்கியொழுகுவதற்காக.

*சனாதிபதியின் பணிப்புரைகள்.*

**22.** சனாதிபதி இச்சட்டத்தின் கீழான தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளைப் பிரயோகிப்பது, புரிவது மற்றும் நிறைவேற்றுவது தொடர்பான பேரவைக்கான அத்தகைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளை காலத்துக்குக்காலம் வழங்கலாமென்பதுடன் அத்தகைய பணிப்புரைகளுடன் இணங்கியொழுகுதல் பேரவையின் கடமையாதல் வேண்டும்.

*முகவராண்மையின் அலுவலர்களும் ஊழியர்களும் பகிரங்க சேவையாளர்களாக கருதப்படுதல்.*

**23.** முகவராண்மையின் எல்லா அலுவலர்களும் ஊழியர்களும் தண்டனைச் சட்டக்கோவையின் கருத்துக்குட்படவும் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

*முகவராண்மையானது அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல்.*

**24.** முகவராண்மையானது இலஞ்சச்சட்டத்தின் கருத்துக்குட்பட அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாக கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்க ஏற்புடையதாதலும் வேண்டும்.

*விதிகள்.*

**25.** (1) பேரவையானது இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 15 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவினால் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் கருமங்கள் தொடர்பிலும் மற்றும் பொதுவாக முகவராண்மையின் அலுவல்களை நிருவகிப்பதற்காகவும் விதிகளை ஆக்கலாம்.

(2) இப்பிரிவின் கீழ் ஆக்கப்படும் ஒவ்வொரு விதியும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

*ஒழுங்குவிதிகள்.*

**26.** (1) சனாதிபதியானவர் விதித்துரைக்கப்பட்ட சட்டத்தினால் தேவைப்படுத்தப்படுகின்ற எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது எக்கருமங்கள் தொடர்பிலும் ஒழுங்குவிதிகளானவை

இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்படவேண்டுமென தேவைப்படுத் தப்பட்டுள்ளதோ அல்லது அதிகாரமளிக்கப்பட்டுள்ளதோ அவ்வெல்லாக் கருமங்கள் தொடர்பிலும் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) இப்பிரிவின்கீழ் சனாதிபதியினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய வெளியீட்டின்மீது அல்லது ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) இப்பிரிவின்கீழ் சனாதிபதியினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் அதனது வெளியீட்டில் இருந்து மூன்று மாதங்களினுள் அங்கீகாரத்திற்காக பாராளுமன்றத்தின் முன் கொண்டுவரப்படுதல் வேண்டும் அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து நீக்கஞ் செய்யப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) ஒழுங்குவிதி ஒன்று நீக்கஞ்செய்யப்பட்டதாக கருதப்பட்டதான தேதிபற்றிய அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

**27**. இச்சட்டத்தில் வேறுவகையில் தேவைப்படுத்தினாலன்றி — பொருள் கோடல்.

"புத்தாக்கம்" என்பது சமூகப் புத்தாக்கம், அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் புத்தாக்கம், பாதுகாப்புப் புத்தாக்கம், சூழல் புத்தாக்கம் மற்றும் சேவைப் புத்தாக்கம் ஆகிய துறைகளில் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது என்பதுடன் "புத்தாக்கவியலாளர்" என்பது அதற்கிணங்க பொருளமைத்துக்கொள்ளப் படுதல் வேண்டும்:-

(அ) புதுமையான தொழில்நுட்பமாதிரி, பயன்பாடு மாதிரி அல்லது கைத்தொழில் வடிவமைப்பு;

(ஆ) புதுமையானதாகவுள்ள உற்பத்திப் பொருள், செய்முறை, சேவை அல்லது எண்ணக்கருத்து;

(இ) புதிய உற்பத்திப்பொருள் ஒன்றின் அல்லது சேவையின் பயன்பாட்டை முன்னேற்றுதல் அல்லது கைத்தொழில், தொழில் அல்லது சமூகமுறை;

(ஈ) தாவரங்கள், விலங்குகள் மற்றும் சூழல் உட்பட இயற்கை வளங்களைப் பயன்படுத்தி ஆக்குவதன் மூலம் உள்நாட்டு அல்லது பாரம்பரிய அறிவு; அத்துடன்

(உ) 2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, புலமைச்சொத்துச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய தகுதியுடைய மேம்பாடு மற்றும் பாதுகாப்பு என்றவகையாக கருதப்படக் கூடியதான வேறேதேனும் காப்புரிமை இல்லாத படைப்புக்கள் அல்லது மேம்பாடுகள் அல்லது சுயதன்மையான புலமைச்சொத்து உரிமைகள்;

''அமைச்சர்'' என்பது, அரசியலமைப்பின் 43 அல்லது 44 ஆம் உறுப்புரையின்கீழ் தேசிய புத்தாக்க முகவராண்மை குறித்தளிக்கப்பட்ட அமைச்சர் எனப் பொருள்படும்.

''தேசிய புத்தாக்க முறைமை'' என்பது, புத்தாக்கத்திற்கு அவசியமாக இருக்கின்றதான அலகு ஒன்று என்ற வகையாக ஒன்று சேர்ந்து பணியாற்றும் நாட்டிலுள்ள ஒழுங்கமைப்புக்கள், நிறுவனங்கள் மற்றும் மக்கள் உட்பட பங்குபற்றுனர்களின் பல்வேறு தன்மையும் மூலவளங்களும் எனப் பொருள்படும்.

''சமூகப் புத்தாக்க ஆய்வுகூடம்'' என்பது, நாடு பூராகவும் முன்னேற்றத்திற்கு முன்னர் சமூகப் பிரச்சினைகளுக்காக அபிவிருத்தி தீர்வுகளை முன்மாதிரிப்படுத்துவதற்கு அல்லது பரீட்சிப்பதற்கு தொலைநோக்குப்பார்வையை அல்லது புத்தாக்கக் கருவிகளை பயன்படுத்துகின்ற பிரசையை மையமாகக் கொண்ட ஈடுபாடுமூலம் துல்லியமான மற்றும் முழுமையானது என்பதை உறுதிப்படுத்துவதற்கான இடம் எனப் பொருள்படும்.

''தொழில்நுட்பம்'' என்பது நிலைத்திருக்கக்கூடிய அபிவிருத்திக்காக குறிக்கோள்களையும், பொருட்கள் மற்றும் சேவைகளையும் எய்துவதற்கான அறிவுப் பிரயோகம் எனப் பொருள்படும்.

''பாரம்பரிய அறிவு'' என்பது, காணிகளின், இயற்கை வளங்களின் மற்றும் சூழலின் வரலாற்றுப் பாரம்பரிய அறிவியல்சார் பயன்பாட்டின் பாரம்பரியம்மீது விருத்திசெய்யப்பட்ட ஞானம் எனப் பொருள்படும்.

''அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம்'' என்பது 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் அல்லது வேறு ஏதேனும் எழுத்தினாலான சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் தாபிக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்டதாக கருதப்பட்ட பல்கலைக்கழகம் என்று பொருள்படும்.

**28.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கு இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

*பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை "பிரகாசன பியச", அரசாங்க அச்சுத் திணைக்களம், இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.*